10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 256 ஞாயிற்றுக்கிழமை பெப்ரவரி 04 2018 ethirolmedia@gmail.com [illegible] 38 18 / 021 300 48 48



## இன்று இலங்கையின் 70 ஆவது சுதந்திரதினம்

யாழ்ப்பாணம், பெப். 04

பிரிட்டனிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்று இன்றுடன் 70 வருடங்கள் பூர்த்தியாகின்றது. சுதந்திர தினத்தைக் கொண்டாட நாடு முழுவதும் ஏற்பாடுகள்

06▶



## மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தீ

மதுரை, பெப்.04

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நேற்று முன்தினம் இரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

ஆலயத்தின் கிழக்கு நுழைவாயில் புகை வெளிவந்ததை அவதானித்த பொலிஸார் விரைந்து செயற்பட்டதன் காரணமாக 3 மணி நேரத்தில் தீ அணைக்கப்பட்டு மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.

06▶

## வட கிழக்கில் 51 சபைகளை கூட்டமைப்பு கைப்பற்றும்

### அஜித் பெரேராவின் ஆரூடம் இது



கொழும்பு, பெப்.04,

"எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில், வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 51 சபைகளையும், நாடளாவிய ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சி 276 சபைகளையும் வெல்லும் சாத்தியங்கள் அதிகமாக உண்டு" என்று

06▶

## சுதந்திரதினத்தை தமிழர்கள் எவ்வாறு கொண்டாடுவது?

### முதலமைச்சர் விரக்தியுடன் கேள்வி



யாழ்ப்பாணம், பெப். 04

சமஷ்டி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாரப் பகிர்வு பெற்றாலே அன்றி நாம் எமது பறி கொடுக்கப்பட்ட உரித்துக்களை மீண்டும் பெற முடியாது. ஆகவே பெப்ரவரி நான்காந் திகதியை எவ்வாறு தமிழர்களாகிய நாங்கள் கொண்டாட முடியும்?

– இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

முதலமைச்சர் அளித்து வரும் வாரம் ஒரு கேள்வி – பதிலுக்கு, 'சுதந்திரக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வது சம்பந்தமாக தமிழ் மக்கள் பேரவையின் கருத்தென்ன? நீங்கள் கொண்டாட்டங்களில் கலந்து

06▶

## அமெரிக்க குடியுரிமையை துறக்கிறார் கோத்தபாய?

### ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவார்



கொழும்பு, பெப். 04

கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையை துறக்கவுள்ளார். இதற்கான கோரிக்கையை அமெரிக்காவிடம் முன்வைத்துள்ளார். இதற்கான சட்ட ஏற்பாடுகளுக்காகவே அவர் அமெரிக்கா சென்றுள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் செய்தி தெரிவித்தன.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பாகவே அவர் அமெரிக்கக் குடியுரிமையைத் துறக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா சென்றுள்ள அவர், அங்கு தனக்கு நெருக்கமானவர்களை சந்தித்து தனது வருங்கால அரசியல் நகர்வு குறித்து ஆராய்ந்தார் என்றும் இவர்களின் சந்திப்பு குறித்த படங்களும் வெளியாகியுள்ளன.

இதேவேளை கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை உயர் மட்ட அழுத்தம் காரணமாகவே நிறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## முன்னணியின் கூட்டத்தில் ஈ.பி.டி.பியினர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், பெப். 04

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கல் வீசித் தாக்கி ஒரு குழுவினர் அட்டகாசம் புரிந்தனர்.

நேற்று மாலை யாழ்ப்பாணம், றக்கா வீதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே இவ்வாறு குழப்பம் ஏற்படுத்தப்பட்டது.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தமது கூட்டத்தைக் குழப்பும் விதத்தில் கல் எறிந்து அட்டகாசம் புரிந்தனர் எனத் தமிழ்த் தேசிய மக்ள் முன்னணி தெரிவித்தது.

இது குறித்து அக்கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

'நேற்றையதினம் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டபோது இளைஞர்கள் சிலர் ஈ.பி.டி.பியின் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இங்கு வேறு கட்சிகளின் கூட்டங்களை நடத்த

06▶

## "மாவை. சேனாதிராஜா துரோகி" வடமாகாண சபை உறுப்பினர் சாடல்

வவுனியா, பெப். 04

'சுமந்திரனை தலைவராக்காமல், தனது மகனை தலைவராக்க மாவை. சேனாதிராஜா நினைப்பது துரோகம்" - என்று கூறியிருக்கிறார் வட மாகாண சபை உறுப்பினர் எம். தியாகராசா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கவில்லை எனப் பொய் சொல்கின்றார் சம்பந்தன். பகிரங்கமாக அவரால் மக்கள் முன்னிலையில் அதனை சொல்ல முடியுமா?

இந்தத் தேர்தலில் தனது மகனை மாவை சேனாதிராஜா சொந்த இடத்தில் களமிறக்கியிருக்கிறார். தனக்கு அடுத்துத் தலைமை தாங்கவே இவ்வாறு அவர் செய்தார். இவ்வாறு குடும்ப அரசியல் செய்யும் தலைமைகளா தமிழர்களுக்கு தேவை? இதை தமிழ் மக்கள் உணரவேண்டும்.

சட்டம் படித்த சட்டத்தரணியான சுமந்திரன் அக்கட்சியில்

06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.


SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# "சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை"



தமிழாக்கம்-எஸ்.சுரேஷ்

**கேள்வி:** தேசிய அரசை அமைத்திருக்கும் இரண்டு கட்சிகளும் பொருளாதாரக் கொள்கையில் இரு வேறுபட்ட நிலைப்பாட்டை உடையவை. அப்படியாயின் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது எப்படிச் சாத்தியப்படும்?

**பதில்:** இரண்டு கட்சிகளும் அடிப்படைச் சந்தை வர்த்தகத்தை ஏற்றுக்கொண்டுள்ளோம். அது தொடர்பில் எந்தப் பிரச்சினையுமில்லை. அதை நடைமுறைப்படுத்தும் போதுதான் சில இடங்களில் வேறுபட்ட கொள்கையில் இருக்கின்றோம். அந்தச் சந்தர்ப்பங்களில் பேசி பொதுவான மாற்றுவழிக்குச் செல்கிறோம்.

நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சந்தர்ப்பத்தில் நாட்டின் கடன் அதிகரித்திருந்தது. வருமானம் கடனைச் செலுத்துவதற்குப் போதாமல் இருந்தது. கடந்த ஆட்சியில் மத்திய வங்கி பிணை முறி ஊடாகவும் சர்வதேச கடன் ஊடாகவும் சுமார் 10ஆயிரம் பில்லியன் ரூபா கடன் பெறப்பட்டிருந்தது.

இது தாங்கமுடியாத கடன் சுமையாகும். நாட்டின் வருமானத்தைவிட மூன்று மடங்கு கடன் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. நாம் இப்போது ஒரு பங்கு கடனைச் செலுத்தியுள்ளோம். 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட வேண்டிய கடனை செலுத்தியுள்ளோம். அதேபோல்,புதிய கடன்களையும் நாம் இப்பொது பெற்றுள்ளோம்.

நாட்டின் வருமானத்தை வைத்துக் கொண்டு கடன் செலுத்துவதும் நாட்டை அபிவிருத்தி செய்வதும் கஷ்டம். இப்போது பொருளாதாரத்தைப் பலப்படுத்தியுள்ளோம். நன்கு திட்டமிட்ட அடிப்படையில் கடன்களைச் செலுத்திக் கொண்டு மறுபுறம் நாட்டையும் அபிவிருத்தி செய்யும் திட்டத்தை வகுத்து செயற்படுகிறோம்.

2020க்குப் பிறகு தேசிய உற்பத்தி வேகமாக அதிகரித்து 2025 இல் நாம் வேகமான அபிவிருத்தியைக் காண்போம். கடன்களை அடைப்பதற்கான ஆற்றலைப் பெருக்குவோம். இப்போது 2015 க்கு முன் பெறப்பட்ட கடன்கள் இன்னும் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

தேசிய உற்பத்தியை மூன்று மடங்காக உயர்த்த முடிந்தால் விரைவாக கடன்களைச் செலுத்தி முடிக்க முடியும். இதற்காக முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக,ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்.

**கேள்வி:** தேசிய அரசு இருக்கின்ற போதிலும் கட்சிகள் இரண்டும் ஒன்றை ஒன்று விமர்சிக்கின்ற நிலையைக் காண்கின்றோம். இப்படியானதொரு நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் தனி அரசு இருந்தால் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த முடியும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

**பதில்:** பொருளாதார விடயத்தில் நாம் உடன்பட்டு நிற்கின்றோம். தனி ஆட்சியாக இருந்தால் அரசின் செயற்பாடுகள் அனைத்தையும் மற்றைய கட்சி எதிர்த்துக்கொண்டே இருக்கும்.இப்போது அந்த நிலை இல்லை. ஒத்துழைத்து வேலை செய்கிறோம்.

**கேள்வி:** 2015 ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் தனித்துப் போட்டியிட்டிருந்தால் எப்படியான முடிவு கிடைத்திருக்கும்?

**பதில்:** எங்களுக்கு அப்போது தேவையாக இருந்தது மகிந்த ராஜபக்ச நிர்வாகத்தை வீட்டுக்கு அனுப்புவதுதான். ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,ஜே.வி.பி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளை இணைத்தால் பெரும் சக்தி ஒன்று கிடைக்கும் என்று நாம் நம்பினோம். அந்த சக்தியைக் கொண்டு வெற்றிபெறுவதற்கு பொது வேட்பாளர் ஒருவர் அவசியப்பட்டார். அதற்கு ஏற்பவே நாம் பொது வேட்பாளராக மைத்திரியை நிறுத்தினோம். அந்த முடிவு எமக்கு வெற்றியைத் தந்தது. அந்த முடிவு தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**கேள்வி:** சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உங்களையும், ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியையும் விமர்சித்து வருகின்றனர்.ஏன் இந்த நிலை ஏற்பட்டுள்ளது?

**பதில்:** இந்தத் தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எமக்கு எதிராக முன்வைக்கும் விமர்சனங்களுக்கு நாம் பதிலளிக்க வேண்டும் என்று எமது உறுப்பினர்கள் சிலர் கூறுகின்றனர். நாம் இது தொடர்பில் விவாதத்துக்குச் சென்றால் அது நீண்டுகொண்டே போகும் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும். இதனால் ஜனாதிபதியை விமர்சிக்க வேண்டாம் என்று நான் எங்களது உறுப்பினர்களுக்கு கூறியுள்ளேன். இது தேர்தல் காலம் என்பதால் தமது வாக்காளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மேடைகளில் இவ்வாறு ஒருவரை ஒருவர் விமர்சிப்பது வழமை.

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'தெரண' சிங்கள தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டி**

**கேள்வி:** 2015 நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி வென்றாலும் மகிந்தவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி ஆற்றிய உரை ஐக்கிய தேசிய கட்சிக்கு சாதகமாக அமைந்து ஐக்கிய தேசிய கட்சி வெற்றிபெற்றது என்று சொல்லப்படுவது உண்மையா?

**பதில்:** அதில் உண்மை உண்டு. அந்த உரை மகிந்தவுக்குப் பாதகமாக அமைந்ததால் அது ஐக்கிய தேசிய கட்சிக்கு வாய்ப்பாகிப் போனது.அதேவேளை,மகிந்த பிரதமராகி இருந்திருந்தால் எமக்கு இன்னும் சாதகமாகப் போயிருக்கும்.

**கேள்வி:** 2015 ஜனாதிபதித் தேர்தலின் பின் 40 ஆசனங்களை கொண்டிருந்த உங்களுக்குப் பிரதமர் பதவி கிடைத்தது.அது மக்கள் ஆணை என்று ஜனாதிபதி கூறினார். அதேபோல்,இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவையும் மக்கள் ஆணை என்று கூறி ஜனாதிபதி ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தமாட்டாரா?

**பதில்:** ஜனாதிபதித் தேர்தலில் எங்களின் அணி வெற்றி பெற்றால் மைத்திரி ஜனாதிபதி ஆவார் என்றும் நான் பிரதமராக நியமிக்கப்படுவேன் என்றும் தேர்தல் மேடைகளில் மக்களிடம் தெளிவாகக் கூறித்தான் வாக்குகளை பெற்றோம். அந்த மக்கள் ஆணையின் அடிப்படையில்தான் நான் பிரதமராக நியமிக்கப்பட்டேன்.இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலானது கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேர்தலாகும். நீங்கள் கூறுவதுபோல் ஆட்சி மாற்றம் எதையும் ஜனாதிபதி செய்யமாட்டார்.

**கேள்வி:** உங்களால் உள்ளூராட்சி சபைகளில் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்பட்டால் நீங்கள் யாருடன் கூட்டுச் சேருவீர்கள்?

**பதில்:** பெரும்பான்மை கிடைக்காத இடங்களில் வேறு கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கும் நிலை ஏற்படலாம். அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப நாம் நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி:** ஊழல்வாதிகளைத் தண்டிப்பதற்கு பிரதமர் பூரண ஆதரவு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். அப்படியென்றால் இப்போது நீங்கள் அதற்கு ஆதரவு வழங்கவில்லை என்றா அர்த்தம்?

**பதில்:** வழங்குகின்ற ஒத்துழைப்பைவிட அதிக ஒத்துழைப்பைக் கோருகின்றார் என்று நினைக்கின்றேன். ஊழல் தொடர்பாக 420 வரையான முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்தன. இந்தக் குற்றச்சாட்டுக்களின் ஒரு பகுதி லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கும் ஒரு பகுதி பொலிஸூக்கும் இன்னொரு பகுதி சி.ஐ.டிக்கும் ஒப்படைக்கப்பட்டன. அதிகமான முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு 15 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.இதில்தான் தாமதம் ஏற்பட்டுள்ளது.இந்த வழக்குகளை துரிதப்படுத்துவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து நீதிமன்றங்களாவது அமைக்கப்பட வேண்டும். திறமையான அரச நீதிபதிகள் தேவை. ஆனால், நீதிபதிகளுக்கான தட்டுப்பாடு இருக்கின்றது. இது தொடர்பில் நாம் பேசி ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

**கேள்வி:** வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் ராஜபக்ச குடுப்பத்தினரின் பணம் உள்ளது என்று கூறப்படுவது உண்மையா?

**பதில்:** இது தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது. இலங்கை பொலிஸ் போய்க் கேட்டால் அந்த நாடுகள் தகவல்களை கொடுக்காது. அந்த நாடுகளின் சட்டங்களின் அடிப்படையில் இதை நாம் அணுக வேண்டியுள்ளது.விசாரணைகள் இடம்பெறுகின்றன.விரைவில் உண்மை வெளிவரும்.

**கேள்வி:** இந்த அரசுக்கு எதிராக சுமத்தப்பட்ட மிகப் பெரிய குற்றச்சாட்டுதான் பிணை முறி மோசடி குற்றச்சாட்டு. இதற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

**பதில்:** இது தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை வெளியிட்டுள்ளது. மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூனன் மகேந்திரன் நியமிக்கப்பட்டதில் எந்தவொரு தவறும் இல்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளுநருக்குரிய அனைத்துத் தகுதியும் உண்டு என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம். மகேந்திரன் இலங்கையில் பிறந்து பின்னர் சிங்கப்பூர் பிரஜா உரிமை பெற்றவர். இலங்கையில் பிறந்து வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற ஒருவர் இலங்கையில் இவ்வாறான உயர் பதவியில் இருக்க முடியும்.நாடாளுமன்ற உறுப்பினர்தான் வெளிநாட்டு பிரஜா உரிமையை பெற முடியாது.

**கேள்வி:** மகேந்திரன் மீது நீங்கள் வைத்த நம்பிக்கைக்கு எந்தவோர் ஆபத்தும் ஏற்படுத்தப்படவில்லை என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**பதில்:** ஆம். அவர் திறமைசாலி .இதற்கு முன் முதலீட்டுச் சபையின் பிரதானியாக கடமை புரிந்துள்ளார்.பிணை முறி சம்பவம் தொடர்பில் எனக்கும் சந்தேகம் இருந்தது. அதனால்தான் நான் உடனடியாகக் குழுவொன்றை அமைத்தது விசாரணை நடத்தினேன்.

நான் பழைய ஆட்சியில் இடம்பெற்ற விடயங்களை முதலில் தேடாமல் இந்த ஆட்சியில் இடம்பெற்ற இந்த மோசடிக்கே முதலிடம் கொடுத்து விசாரணை நடத்தினேன். இந்த அரசின் வெளிப்படைத் தன்மையை நான் காட்டினேன்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும்நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் அடிப்படையிலேயே மத்திய வங்கியை நிதி அமைச்சிடம் இருந்து பிரித்து எனது அமைச்சுடன் இணைத்துக் கொண்டேன். மத்திய வங்கி எனக்குக் கீழ் இருக்கின்றபோதிலும் அதுவும் நிதிச் சபையும் சுயாதீனமாக இயங்குகின்றது.

**கேள்வி:** மகிந்த ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணை முறி மோசடி தொடர்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

**பதில்:** முதலில் இந்தப்பிரச்சினையை முடித்த்துவிட்டு அந்தப் பிரச்சினைக்குச் செல்வதற்குத் தீமானித்தோம்.2008 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற பிணை முறையால் இந்த நாட்டுக்கு அதிக இலாபம் ஏற்பட்டுள்ளது என்று ஆணைக்குழு அறிக்கை கூறுகின்றது. மத்திய வங்கியின் நிதிச் சபையின் அனுமதி இல்லாமலேயே அது இடம்பெற்றுள்ளது. மகிந்தகூட அதை மறுக்கவில்லை.

**கேள்வி:** பிணை முறி மோசடியால் இழந்த பணத்தை எவ்வாறு மீளப் பெறப் போகிறீர்கள்?

**பதில்:** இதனால் ஏற்பட்ட நாட்டம் 9 பில்லியனாகும். ஆனால்,பெர்ச்சுவல் நிறுவனத்தின் 12 பில்லியன் ரூபா பணம் மத்திய வங்கியில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. நட்டத்தை மீளப் பெறுவதற்கு புதிய சட்டம் தேவை என்று ஆணைக்குழுவின் அறிக்கை கூறுகின்றது.அந்த சிபார்சின் அடிப்படையில் நாம் செயற்படுவோம்.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கோரி வருகின்றது. இது சாத்தியப்படுமா?

**பதில்:** சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை.ஒற்றையாட்சியின் கீழ் தீர்வை வழங்குவதற்குத்தான் அனைத்துக் கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன. அதற்கான ஏற்பாடுகளே செய்யப்படுகின்றன. புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் மாற்று வழிகள் இருப்பின் அவை பற்றியே அரசியல் கட்சிகள் இனி பேசவேண்டியுள்ளது.

**கேள்வி:** அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் நீங்களா போட்டியிடுவீர்கள்?அல்லது வேறு ஒருவரை நிறுத்துவீர்களா?

**பதில்:** 2020 இல் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்று நாம் முதலில் பார்க்க வேண்டும். அந்தப்பதவியின் எதிர்கால நிலை எப்படி அமையப்போகின்றது என்று நாம் பார்க்க வேண்டியுள்ளது. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில்தான் நாம் ஒரு முடிவை எடுக்க வேண்டியுள்ளது.

எதிரொலி Ethiroli
ஞாயிறு, 04 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# நீங்கள் வேற நாடய்யா... நாங்கள் வேற நாடு

இன்று இலங்கையின் 70 ஆவது சுதந்திரதினம்.

ஆனாலும் இன்னும் இந்த நாட்டில் சுதந்திரத்தின் அர்த்தத்தை உணரமுடியாத மக்கள் நிறையவே இருக்கிறார்கள். குறிப்பாக இலங்கையின் சுதந்திரதினம் என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இன்றளவும் , போனஸாகக் கிடைக்கும் ஒரு அரச விடுமுறை நாள் மட்டுமே. இந்த முறை சுதந்திரதினம் ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டதால், விடுமுறை என்ற அற்ப சந்தோஷமும் இல்லாமல் போய்விட்டது. மற்றப்படி, சுதந்திர தினத்துக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதவர்களாகவே தமிழர்கள் நடந்து கொள்வது வாடிக்கை.

இப்படியான மனநிலை உருவாவதற்கு முழுமுதற் காரணம் சிங்கள அரசியற் தலைவர்கள் தான். தமிழ் மக்களை நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தியதாலும், ஒட்டுமொத்த இலங்கையையும் பௌத்த சிங்கள நாடாக்குவதற்கு எடுத்த முயற்சிகளாலும், ஈவிரக்கமற்று போரின் பெயரால் லட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்ததாலும் "தமிழர்களும் இலங்கையின் பிரஜைகளே, இந்த நாட்டின் சுதந்திரதினம் அவர்களுக்கும் உரித்தானதே" என்ற நிலையைத் தோற்றுவிக்க ஆட்சிக்கு வந்த எவரும் முயலவில்லை. மாறாக இன்னுமின்னும் தமிழர்கள் இந்த நாட்டின் வந்தேறுகுடிகள் என்று சொல்லி வரலாற்றை மாற்றி, தாமே பூர்வீக குடிகளெனவும், அதனால் தமக்கே முழு இலங்கையும் சொந்தமெனவும் கொக்கரித்தார்கள். அரசின் எல்லாக் காரியங்களிலும் பௌத்தத்துக்கும், மகாநாயக்கர்களுக்கும். பிக்குகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டது. தமிழ் மக்களின் அறிவுக்கருவூலமான யாழ்.நூலகம் எரியூட்டப்பட்டது. இரு முறை நாடெங்கும் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் உண்டாக்கப்பட்டது. சைவ, இஸ்லாமிய மத வழிபாட்டுத் தலங்களுக்கு சிக்கலான நிலை வலிந்து உருவாக்கப்பட்டது.

மனிததைக் காலால் மிதித்து, இரத்தத்தின் மேல் படுத்திருந்தபடி, 30 வருடங்களாக ஒரு பெரும் போரை இலங்கை அரசுகள் செய்திருந்தன. இந்தப்போரில் லட்சக்கணக்கான தமிழ் மக்களின் உயிர் காவு வாங்கப்பட்டது.அதிலும் குறிப்பாக முள்ளிவாய்க்காலில், ஒரே தினத்தில் பல்லாயிரக்கணக்கானோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சரணடைந்தவர்கள் சித்திரவதைக் கூடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, உயிரை மட்டும் இருக்கச் செய்துவிட்டு, உடலைச் சாகடித்தார்கள். சிலர் கண்கள் கட்டப்பட்டு, நிர்வாண நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பெண்கள் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு அதன் பின்னர் கொன்று குவிக்கப்பட்டனர். போரில் செத்து மடியாமல் தப்பிப் பிழைத்து, எஞ்சிய மக்கள் நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில், திறந்தவெளிச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். போராளிகள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டார்கள். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. வாழிடங்கள் இராணுவ மையங்களாகின.

இப்படியெல்லாம் ஒரு இனத்தை எந்தளவு தூரம் சிறுமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி, சிதைக்கமுடியுமோ அதைவிடவும் மேலாகச் செய்துவிட்டு, இப்போது 'இலங்கையர் அனைவரும் ஒருதாய் மக்கள்' என்று இந்தச் சுதந்திரதினத்தில் தமிழர்கள் எப்படிச் சிந்திக்கத் தலைப்படுவார்கள்?

போர் முடிந்த பின்னரும் கூட தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்குமான புறக்கணிப்புகள் தொடரவே செய்கின்றன. அதையெல்லாம் சரி செய்து, என்றைக்கு நாமும் இந்நாட்டு குடிமகன் தான் என்ற நினைப்பு தமிழர்களுக்கு வருகிறதோ அன்றுதான் இலங்கையின் உண்மையான சுதந்திரதினமாக இருக்கும். ஆனால் அது இன்னும் சில நூற்றாண்டுகளுக்குச் சாத்தியமான ஒன்றல்ல.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தூய அரசியல் இயக்கத்தை உருவாக்குவோம் வாருங்கள்

## மக்களை அழைக்கிறார் ஜனாதிபதி



களனி, பெப்.04,

அரசியல்வாதிகள் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்வதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்து, அபிவிருத்தி என்ற போர்வையில் தனிப்பட்ட முன்னேற்றத்துக்காகச் செயற்பட்டு, பாரிய ஊழல், மோசடிகளை செய்துள்ளனர். இதனால் நாட்டு மக்கள் அபிவிருத்தியின் நன்மைகளை இழந்துள்ளனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

களனி பிரதேசத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொணடபோதே இதனைத் தெரிவித்தார்.

நாட்டையும் மக்களையும் நேசிக்காத அரசியல்வாதிகளால் கடந்த பல தசாப்தங்களாக பின்னடைந்திருக்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உரிய நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் அர்ப்பணிப்புடன் தாம் செயற்பட்டு வருகிறார் எனவும் அவர் கூறினார்.

தூய அரசியல் இயக்கம் மற்றும் நாட்டை கட்டியெழுப்புவதற்கான சரியான நிகழ்ச்சித் திட்டத்துடன் இலங்கையை சுபீட்சமான தேசமாக கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணையுமாறு, தாம் அனைத்து மக்களிடமும் கேட்டுக்கொள்வதாக இதன்போது அவர் தெரிவித்தார். (இ)

# யாழ். நூலகத்துக்கு ஒரு இலட்சம் நூல்கள்



சென்னை, பெப். 04

யாழ்ப்பாண நூலகத்துக்கு ஒரு லட்சம் புத்தகங்களை தமிழக அரசு வழங்க உள்ளதாக தமிழக அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா நூலகத்தில் நேற்று நடந்த நிகழ்வில் பேசியபோதே அவர் இத்தகவலைக் கூறினார்.

தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகளுக்கு தமிழக அரசு நூல்களை அனுப்பும். யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு ஒரு இலட்சம் நூல்களும் ஏனைய நாடுகளின் நூலகங்களுக்கு 2,500 தொடக்கம் 5, 000 வ்ரையிலான நூல்களும் அனுப்பி வைக் கப்படும் என்றும் அவர் சொன்னார்.(ச)

# அழியும் ஆபத்தில் சிகிரியா ஓவியங்கள்!



கொழும்பு, பெப்.04,

சிகிரியா ஓவியங்களில் மீண்டும் பூஞ்சை ஏற்பட்டுள்ளதால், அந்த ஓவியங்கள் அழிந்து போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. அப்போது இரசாயனம் ஒன்றை பயன்படுத்தி அது தடுக்கப்பட்டது. தற்போதும் பூஞ்சைகள் மீது இரசாயனம் தடவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வார இறுதிக்குள் பூஞ்சை பரவுவதை தடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கண்ணாடி சுவர் பகுதியில் உள்ள ஓவியங்களிலேயே பூஞ்சை ஏற்பட்டுள்ளது என்றும், காலநிலை காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம் என்றும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் பேராசிரியர் கிறிஸ்சாந்த குணவர்தன தெரிவித்தார். (இ)

# வரவேற்பை பார்த்த ஹக்கீம் மிரண்டு எடுத்தார் ஓட்டம்



மட்டக்களப்பு, பெப். 04

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு சென்ற அமைச்சர் ஹக்கீமுக்கு விளக்குமாறு, துடைப்பத்தடியைக் காட்டி மக்கள் அளித்த வரவேற்பைப் பார்த்து திரும்பி சென்றார்.

கல்முனை மாநகரசபை தேர்தலில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் களமிறங்கியுள்ளது. இந்த பிரசார கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, நேற்று சாய்ந்தமருதுக்கு அமைச்சர் ஹக்கீம் சென்றார்.

ஏற்கனவே சாய்ந்தமருதில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சினர் ஏற்பாடு செய்திருந்த சில நிகழ்வுகளில் ஹக்கீம் கலந்து கொண்டார். அவரின் வருகையை எதிர்த்து கடைகளை மூடி, கறுப்புக் கொடிகளை கட்டி எதிர்ப்பை வெளிப்படுத்திய மக்கள், வீதியின் இருபுறமும் நின்று விளக்குமாறு, தும்புத்தடிகளையும் ஏந்தியிருந்தனர்.

சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனி உள்ளூராட்சி சபையைப் பெற்றுக் கொடுப்பதில் ரவூப் ஹக்கீம் துரோகம் இழைத்து விட்டார் எனக் கூறியே அப்பகுதி மக்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (ச)

# ரணில் மைத்திரி அரங்கில் நடனம்: பார்த்து ஓரமாக ஆடுகிறார் சந்திரிகா

## நுவரெலியாவில் மகிந்த எள்ளல்

நுவரெலியா, பெப். 04,

'லப்டோப் டான்ஸை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆடுகிறார்கள். அதை சந்திரிகா அம்மையார் ஓரமாக நின்று பார்த்துக் கொண்டு ஆடுகின்றார் என்று கிண்டலடித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச.

உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் தாமரை மொட்டு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் வளங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அந்தவகையில் நுவரெலியாவையும் ஏலத்தில் விற்க ஆயத்தப்படுத்துகின்றனர். மலையகத்திற்கு ஒரு இலட்சம் வீடுகளை வழங்குவதாக கூறினர். அது நடக்கவில்லை.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளை வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதே எனது கொள்கை என்று கூறிய அவர், இரு கைகளிலும் தாமரை மொட்டுக்களை ஏந்தியவாறு பங்கேற்றார். (இ)

## இன்று நாளும் கோளும்

04.02.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 22 ஆம் நாள்


சதுர்த்தி பி.ப. 01.52 மணி வரை | உத்தரம் 03.06 வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 04.30 - 6.00 | சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 | எமகண்டம் மு.ப. 12.00 - 01.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தடங்கல் | சாந்தம் | சுகம் | போகம் | நிறைவு | பிரீதி | நன்மை | உறுதி | செலவு | பெருமை | இன்பம் | தனம் |

# போர்க் குற்றங்களை தமிழர்கள் மறக்க வேண்டுமாம்

## வடக்கு ஆளுநர் கூரே வலியுறுத்துகிறார்



யாழ்ப்பாணம், பெப்.04,

போரில் இடம்பெற்ற குற்றங்களை அனைவரும் மறந்து சாந்தி, சமாதானமாக வாழவேண்டும் என்றுவடக்கு மாகாணஆளுநர் றெஜினோல்ட் குரே வலியுறுத்தினார்.

அநுராதபுரதம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவரின் வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அந்த அரசியல் கைதிகள் மூவரது உறவினர்களும் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தனர். அவர்கள் ஜனாதிபதிக்கும், ஆளுநருக்கும் நன்றி தெரிவித்ததாக சொல்லப்பட்டது.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துவெளியிட்ட போதே வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டம் நடத்திய காரணத்தால் நானும் மறியலில் இருந்தேன். தற்போது போராட்டங்கள் மற்றும் போர் என்பன முடிந்துவிட்டன.

அந்தக் காலத்தில் நடைபெற்றவைகளை எல்லாம் நாம் மறக்கவேண்டும். அவற்றை நெஞ்சில் வைத்துக் கொண்டு கோபத்தில் செய்பவைகளால் எந்தப் பயனுமில்லை.

இந்த நாட்டில் இடம்பெற்ற போரால் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மிகவும் வேதனையடைந்தனர். இப்போது எல்லா மக்களும் ஒரு தாய் பிள்ளைகளாக இந்த தேசத்துக்கு விடுதலை கொண்டு வர வேண்டும். இந்த நாடு சுதந்திரமடைந்த பின்னர் 70 ஆண்டுகள் என்ன நடந்தது? முஸ்லிம் தலைவர்கள் அரசுடன் இணைந்து தமது மக்களுக்காக வேலை செய்தனர். தமிழ் மக்கள் 70 ஆண்டுகள் அரசுக்கு எதிராக இருந்தனர்.

போராட்டம் செய்ய வேண்டாம் என நான் சொல்லவில்லை. அரசியல் நோக்கத்துக்கு அதனைச் செய்வோம். அதற்கு இடையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது இருந்தால் அவற்றை உடனடியாக நேரடியாகச் செய்யவேண்டும். அதுதான் மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும் -என்றார்.

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி வருவதில்லை என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளையும் அவர் இதன்போது நினைவுபடுத்தினார். (அ)

## யானை தாக்கிய தேரர் மரணம்

கொழும்பு,பெப்.04,

யானைத்தாக்குதலுக்கு உள்ளான, பெல்லங்வில விமலரத்ன தேரர், கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், மரணமானார்.

நேற்று முன்தினம் விகாரையில் நின்றிருந்த யானைக்கு உணவூட்டும் போது அந்த யானை, தேரரைத் தாக்கியுள்ளது. காயமடைந்த தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மரணமடைந்தார். (இ)

## பிணைமுறி மோசடி இன்னும் வெளியிடுவேன்

கொழும்பு, பெப்.04

பிணைமுறிப் பத்திர திருடர்களுக்கு மேலதிகமாக இதுவரை வெளிவராத சர்ச்சைக்குரிய ஊழல், மோசடிகள் தொடர்பான விடயங்களை சாட்சியங்களுடன் நாடாளுமன்றில் அம்பலப்படுத்துவேன் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறும் விசேட விவாதத்தின் போதே சாட்சியங்களை முன்வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த விவாதத்தின் பின்னர் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அப்பழுக்கற்றவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வாய்ப்பு கிடைக்கும் - என்றார். (ச)



## கரவெட்டி கிரிக்கெட்: கொலின்ஸ் சம்பியன்

கரவெட்டி, பெப். 04

ஸ்பேஸ் அணியை 2 விக்கெட்களால் வென்று சம்பியனைக் கைப்பற்றியது கொலின்ஸ் அணி.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் கிரிக்கெட் இறுதியாட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் கொலின்ஸ் அணியை எதிர்த்து ஸ்பேஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்பேஸ் அணிக்கு டெஸ்மன், பவன் இணை சிறந்த ஆரம்பம் கொடுத்தது. மதுசனும் சிறப்பாக ஆடவே 15 ஓவர்களில் 6 விக்கெட்களை 96 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் ஆரம்ப இணை சுகந்தன், ஜெயச்சந்திரன் சிறப்பான ஆட்டத்தை வழங்கியது. தொடர்ந்து களமிறங்கிய தாஸ் அதிரடியாக ஓட்டங்களை பெற்று கொடுத்து ஆட்டம் இழந்தார். இறுதிக்கட்ட பரபரப்பில் துவி, வரகுணன் சிறப்பான இணைப்பாட்ட த்தை வழங்க, இறுதியில் கோகுலன், திருக்கோகுலன் ஆகியோரும் கைகொடுக்க 14.2 பந்து பரிமாற்றம் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 100 ஓட்டங்களை பெற்று சம்பியனைக் கைப்பற்றியது. (ச)

# அப்போது எதுவும் செய்யாதோர் மக்களை ஏமாற்ற முயல்கின்றனர்




கிளிநொச்சி, பெப்.04

"அரசின் பங்காளிகளாக இருந்த போது, பெருமளவு நிதி கிடைத்தும், எமது பகுதிகளை அபிவிருத்தி செய்யாதவர்கள், இப்போது அதே அபிவிருத்தியின் பெயரைச் சொல்லி வாக்குக்கேட்க வருகிறார்கள்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச சபையின் கீழுள்ள பொன்னாவெளி வட்டாரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், உரையாற்றியபோதே சிறிதரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

"முன்னைய மகிந்தராஜபக்ச அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் கூட்டாளிகளாகவிருந்து அட்டகாசம் புரிந்து ,எமது பகுதியில் காட்டாட்சி நடத்தியவர்களுக்கு அபிவிருத்திக்காக பெருமளவான நிதி கிடைத்தது .அப்போதே எமது பகுதிகளை அவர்களால் அபிவிருத்தி செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அப்போது எதுவும் செய்யாமல் இப்போது வருகிறார்கள்' தமக்கு வாக்களியுங்கள் உங்கள் பகுதிகளை அபிவிருத்தி செய்கின்றோம்'என்று. இப்படித்தான் எமது மக்களை அவர்கள் ஏமாற்றலாம் என நினைக்கிறார்கள். எமது மக்கள் ஏமாளிகளல்லர்.

தமிழர் தாயகப் பகுதிகளின் நடைபெறுகின்ற தேர்தல்களில் எக்காலத்திலும் சோரம் போகாத தமிழ் தேசியக் கட்சிக்குத்தான் ஒவ்வொரு தமிழ் மகனும் வாக்களித்து தமது ஒற்றுமையை நிலைநாட்ட எமது அபிலாசைகளை அடைந்து கொள்ள முயற்சிப்பான்.

இந்த நாட்டிலே நாம் விடுதலையை வேண்டிப் போராடுகின்ற ஒரு இனம். எமக்கு அபிவிருத்தியும் வேண்டும். எமக்கான விடுதலையும் வேண்டும்.

நாம் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக அகிம்சை வழியில் போராடிய போது ஆயுதம் கொண்டு அடக்கி ஒடுக்கப்பட்டோம். அதன் விளைவாக கடந்த 30 வருட காலமாக ஆயுத வழியில் போராடி, கடந்த 2009 இல் எமது ஆயுத வழிப் போராட்டமும் முள்ளிவாய்க்காலுடன் மௌனிக்கப்பட்டது. அதன் பின்னர் எமது தேசியத் தலைவரின் தீர்க்கதரிசன சிந்தனை மூலம் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற தமிழர்களின் அரசியல் பலம் மிக்க சக்தியின் மூலம் அரசியல் வழியில் போராடி வருகின்றோம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இடுகின்ற வாக்குகள், தமிழ் மக்களின் பலத்தை நிலை நிறுத்துவதோடு, எமது விடுதலைக்கான பயணத்துக்கும் வலுச் சேர்க்கும்" என்றார் அவர்.

மேற்படி நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சரும், வடமாகாணசபை உறுப்பினருமான த.குருகுலராசா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பிரதேச மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(அ)









கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மெய்வன்மைப் போட்டி நேற்று அதிபர் கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற போது....



# மாவை சொன்ன போர் இன்னும் வெடிக்கவில்லை

## பொன். காந்தன் கிண்டல்

வவுனியா, பெப்.04

"அடிக்கடி போர் வெடிக்கும், போர் வெடிக்கும் என்று மாவை சேனாதி ராசா சொன்னதை நானும் நம்பினேன். ஆனால் கடைசிவரையும் மாவையின் போர் வெடிக்கவேயில்லை" என்று கிண்டலாகக் கூறியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கரைச்சிப் பிரதேச சபைத் தேர்தலில் போடியிடும் பொன். காந்தன்.

வவுனியா, கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

"அரசியல் கைதிகளை விடுதலை செய்யா விட்டால் வடக்கு கிழக்கில் போர் வெடிக்கும், காணாமல் போனோரை விடுவிக்கா விட்டால் வடக்கு- கிழக்கில் போர் வெடிக்கும், காணிகளை விடுவிக்காவிட்டால் வடக்கு- கிழக்கில் போர் வெடிக்கும் என்று மாவை சேனாதிராசா அடிக்கடி கூறினார். இதைக் கேட்டு நான் பல தடவைகள் போருக்கு முகம் கொடுக்க தயாரான நிலையில் , முட்டை மா வறுத்து பை செய்து வைத்தேன். ஆனால் போர் தான் கடைசி வரையும் வெடிக்கவில்லை.

அன்று எங்களது தலைவர் பிரபாகரன் சொன்னார் போர் வெடித்தது. அதனால் அவரால் உருவாக்கப்பட்ட இவர்கள் சொன்னாலும் வெடிக்கும் என நினைத்தேன் ஆனால் வெடிக்கவில்லை. அவர்கள் ரணிலுடன் தான் சண்டை போட்டார்கள். தமக்கு 2 கோடி 4 கோடி, 30 கோடி என அவர்கள் கோடிக்கு தான் சண்டை போட்டார்களே தவிர மக்களுக்காகச் சண்டை போடவில்லை.

எனவே மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இடைக்கால அறிக்கையில் சமஷ்டி இருக்கென்று சொல்கிறார்கள். நான் புரட்டிப் புரட்டி படித்து பார்த்தேன். எந்தப் பக்கத்திலும் அப்படி இல்லை. சம்பந்தனுக்கும், சுமந்திரனுக்கும், மாவைக்கும் தான் அது தெரியுதாம். இதன் உண்மை நிலையை மக்கள் புரிந்து கொள்ளுங்கள். 1000 விகாரைகளை அமைத்து இந்த நாட்டை பௌத்தமயக்கல் செய்ய ரணில் முயற்சிக்கிறார். இதற்கு எம்மவர்களும் துணை போகிறார்கள். இதனை மக்கள் புரிந்து கொண்டால் இம்முறை வீட்டுக்காரரை நிரந்தரமாக வீட்டுக்குள் இருக்கச் செய்ய முடியும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)



### "தன்நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்."

திருவள்ளுவர் என்னத்தைச்சொன்னாலும் வலு கெட்டிக்காரன் தான். எத்தினை வருசத்துக் முன்னமே, இப்பிடித் தமிழ் ஆக்கள் செய்வினம் எண்டு தெரிஞ்சு தானே உந்தத் திருக்குறளை எழுதி வைச்சவர். அவர் எழுதின மாதிரியே எல்லா விசியங்களும் நடந்து கொண்டிருக்கிது. திருவள்ளுவர் ஏன் திருக்குறளைத் தமிழிலை எழுதின்வர் தெரியுமே? எண்டு கேட்டதுக்கு முதலி சொன்னான், தமிழனைத்தான் திருத்த வேணும் எண்டு அப்பவே திருவள்ளுவருக்குத் தெரிஞ்சிருக்கு. அதாலைதான் எழுதினவர் எண்டு. நான் சொன்னன் அப்பிடி இல்லை தமிழனுக்குத்தான் உது விளங்கும் அதுதான் தமிழிலை எழுதினவர் எண்டு. உதாலை எனக்கும் முதலிக்கும் கொஞ்ச நேரம் பேப்பர் கடையிலை புடுங்குப்பாடு, பிறகு முதலி என்ரை வழத்துக்கு வந்திட்டான்.

இப்ப சிவசக்தி ஆனந்தன் உதைச் சொல்லாட்டி உதுகும் வெளியிலை வந்திராது தெரியுமோ? அப்பிடியே அமத்தியிருப்பினம். இப்ப அரைவாசிப்பேர் எப்பிடித் தாங்கள் வேண்டினவை? எங்கை எப்பிடிச் செலவழிச்சவை? எண்ட பட்டியல் போடினம். உண்மையாச் செலவழிச்சிருந்தால் செய்ததை அப்பிடியே எழுதிப் பாக்கக் கணக்குச் சரிவரும். செய்தது பொய் எண்டபடியால்தானே கணக்கு எழுதிப் பாக்க அது நேராகுதில்லை. ஒண்டில் கூடுது, இல்லாட்டிக் குறையிது. வீட்டுத் தலைவர் தான் அதை எப்பிடி சிலவழிச்சவர் எண்டு பட்டியலைப் போட்டார். இண்டைவரைக்கும் அவர் போட்ட கணக்கைத் திருப்பித் திருப்பிக் கூட்டியும் பாத்தன், கழிச்சும் பாத்தன், அவர் வேண்டினதிலை தொண்ணூறைக் காணேல்லை. முதலிக்குக் கோவம் வந்திட்டுது சொன்னான் "தலை கீழா நிண்டு கூட்டண்ணை அப்ப சரிவரும் எண்டு."

என்னெண்டாலும் ஒருவகையிலை தமிழர் மனச்சாட்சி உள்ளவை எண்டதைச் சில விசியத்திலை நிரூபிச்சுக் கொண்டிருக்கினம். சேந்து களவெடுத்தாலும், சேந்து பொய் சொன்னாலும் பிரிஞ்சாப் பிறகாவது குற்றஞ் செய்து போட்டம் எண்டு நெஞ்சு சுடுகிதெல்லே. அதாலை நாள் செண்டெண்டாலும் உண்மையைச் சொல்லினமெல்லே? ஒண்டா இருந்து, ஒரு கோப்பையிலை திண்டு, மச்சான் மாமன் முறை கொண்டாடினவை, எண்டாலும் அவைக்குச் சனத்தை ஏமாத்திப் போட்டம் எண்டும், சனத்துக்குச் செலவழிக்கக் குடுத்த காசை எடுத்து மனுசிக்குக் காப்பும், பெட்டைக்கு நெக்கிளேசும், பெடிக்குப் பெட்டி மோதிரமும் செய்து போட்டம் எண்டும் நெஞ்சு சுடுகிதெல்லே? அதாலை தான் சாரை புத்துக்கை இருந்து வெளிக்கிட்ட மாதிரி ஒவ்வொண்டா வெளியிலை வருகிது.

இதுக்கை இத்தினையும் நடந்தாப்பிறகும் திருந்துவம் எண்டில்லை. பிறகும் மண்வெட்டித் தாட்டு மறைக்கிற வேலை எல்லே செய்ய வெளிக்கிடுனம். சுமந்திரன் சொல்லுறார் வழக்குப் போடுவன் எண்டு. இப்ப அரசாங்கச் சார்பான எம் பி மாரும், மகிந்தாவும் அவற்றை ஆக்களும் சேந்து உதைச் சொல்ல வெளிக்கிட்டிட்டினம். அவையின்ரை முகநூலிலையும் போட்டுக் கிடக்காம். இப்ப அவர் ஆருக்கு வழக்குப் போடுவர். எல்லாரையும் கோட்டுக்கு இழுத்தால் தெரியும் சீத்துவக்கேடு. சுமந்திரனுக்குத் தெரியும் என்ன நடக்குமெண்டு. "அவர் சும்மா வெருட்டிறார்" எண்டு முதலி அடிக்கடி சொல்லுறான். வெருட்டிப் பாக்கிறதோடை நிண்டால் சரி. விஷப் பரீட்சை வேண்டாம். தற்செயலா அதைத்தொட்டு வேறை பொட்டுக்கேடு வந்திட்டால் இன்னும் காரியம் கெட்டுப் போம். இன்னும் என்னத்தை செய்திட்டு வெளியிலை தெரியாமல் அடக்கி வைச்சிருக்கினமோ தெரியாது.

எல்லாத்தையும் அடக்கப்பிடாது எண்டு அப்பு அடிக்கடி சொல்லுறவர். அடக்கினால் சுகாதாரக் கேடு வருமாம். சில நேரம் ஆள் வெடிச்சுச் செத்தும் போமாம். அதாலை என்ரை சகோதரங்களே! செய்ததை, எடுத்ததை எல்லாம் கூட்டம்போட்டுச் சொல்லுங்கோ. இந்த ஆட்டம் தோத்தாலும் பரவாயில்லை

- வில்லங்கம் விநாசி

# தமிழர்களின் காணியில் அத்துமீறிய குடியேற்றங்கள்

## சாந்தி எம்.பி குற்றச்சாட்டு

வவுனியா, பெப்.04,

"மகாவலி அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து பேரினவாத கட்சிகள் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்கின்றன. யுத்தத்தில் தமிழ் மக்களை நேரடியாகச் சிதைத்தவர்கள் தற்போது மறைமுகமாக தமிழரை நாளுக்கு நாள் சிதைத்து வருகின்றனர்." என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா குற்றஞ் சாட்டியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நெடுங்கேணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரசார கூட்டம் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா,

"யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு கோடி ரூபாவை பெற்று அபிவிருத்தியை செய்யத் தெரியாத நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஏனைய 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலஞ்சம் வாங்கி விட்டனர் என்று பொய் பிரசாரம் செய்கின்றார். அத்துடன் வ்ன்னி அமைச்சர் ஒருவர் வடக்கு கிழக்கு மீண்டும் இணைக்கப்படக் கூடாது என்ற நோக்கத்தில் சட்டவிரோதமாக முஸ்லிம் குடியேற்றத்தை மேற்கொண்டு வருகின்றார்" என்று குற்றஞ்சாட்டினார். (இ)

# ஹெரோயினுடன் 2 இந்தியர்கள் கைது

மன்னார், பெப்.04,

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த இந்தியப் பிரஜைகள் இரண்டு பேர் தலைமன்னார் கடற் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆதம் பாலத்துக்கு அருகில் கடல் பகுதியில் கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றை சோதனையிட்ட போது இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் என்று சந்தேகிக்கப்படுகின்ற 423.9 கிராம் அளவுடைய போதைப் பொருளும் 157 பீடிப் பொதிகளும் சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சந்தேகநபர்களும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (இ)

# மழை பெய்யும்

கொழும்பு, பெப்.04,

நாட்டின் பெரும்பாலான இடங்களில் எதிர்வரும் தினங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும், ஊவா மாகாணத்திலும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம். மத்திய, சப்ரகமுவ, மேல், ஊவா மாகாணங்களில் 100 மில்லி மீற்றரை தாண்டிய மழை வீழ்ச்சி பதிவாகும் என்று திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'வேலியே நெல்லை மேய்ந்தது'

# களவாடபட்ட நெல் மூடைகள் காவலாளி வீட்டில் கண்டுபிடிப்பு

வவுனியா, பெப்.04

வவுனியா வேப்பங்குளம் நெற் களஞ்சியசாலையில் நெல் மூடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் அந்தக் களஞ்சியசாலையின் காவலாளி உட்பட இருவரை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெற் களஞ்சியசாலையின் காவலாளியை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்த பொலிஸார் அவரது வீட்டைச் சோதனை செய்த போது, அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 69 நெல் மூடைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

வேப்பங்குளம் நெற் களஞ்சியசாலையில் அண்மையில் நெல் மூடைகள் களவாடப்பட்டிருந்தன. இது குறித்துக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக அந்தக் களஞ்சியசாலையின் காவலாளியைப் பொலிஸார் விசாரணை செய்தபோது, அவர் பதுக்கி வைத்திருந்த 2,720 கிலோகிராம் நெல் கைப்பற்றப்பட்டது. அத்துடன் காவலாளிக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வந்த நெற்களஞ்சியசாலைக்குப் பொறுப்பான அரச அதிகாரியைப் பொலிஸார் தேடி வந்தனர். அந்த அதிகாரி வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்தார்.

"கைப்பற்றப்பட்ட நெல்லின் பெறுமதி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆகும். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்" எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஜப்பானிய உதவியுடன் களனிப் பாலம் நிர்மாணம்

கொழும்பு, பெப்.04,

புதிய களனிப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜப்பானின் ஜெய்கா நிறுவனத்தின் உதவியோடு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பாலத்தின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுறது. ஆறு ஒழுங்கைகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பாலம் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## விசேட தேவையுடையோர் வாக்களிக்க வாகன வசதி

கொழும்பு, பெப். 04

விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதற்காக இலவச வாகனப் போக்குவரத்து வசதிகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்ய விரும்புவோர் இன்றைய தினமே விண்ணப்பிக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 07ம் திகதி விசேட பஸ் போக்குவரத்து சேவையை முன்னெடுக்க உள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்துப் பிரதிப் பொது முகாமையாளர் சந்திரசிறி கூறினார். (ச)

# தகவல் அறியும் உரிமை சட்டத்துக்கு வயது ஒன்று

கொழும்பு, பெப். 04

தகவல் அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நேற்றுடன் ஒருவருடம் பூர்த்தியடைந்தது. 2016ம் ஜூன் மாதம் 24ம் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட இந்த சட்டம் கடந்த வருடம் பெப்ரவரி மூன்றாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் இலங்கை உலகில் ஏனைய நாடுகளிலும் பார்க்க முன்னிலையில் காணப்படுவதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பான மேலதிக செயலாளர் திருமதி திலக்கா ஜயசுந்தர தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு தகவல் அறிந்து கொள்ளும் உரிமை குறித்த சட்டத்தை, அறிந்து கொள்வதற்காக தொடர் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் பணிப்பாளர் எஸ். கித்சிறி தெரிவித்தார்.

இந்த வருடம் தகவல்களை அறிந்து கொள்வது தொடர்பான பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வருடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் மூலம் நாட்டின் ஒழுக்க விதிகள் மற்றும் நல்லாட்சியின் அடிப்படை கோட்பாடுகளை நிலை நிறுத்த வேண்டுமாயின், பொதுமக்களின் பங்களிப்பு அவசியமாகும். தமக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பொதுமக்கள் அது தொடர்பில் தெளிவு இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த தெளிவை ஏற்படுத்தும் சவாலை நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு பொறுப்பேற்றுள்ளதாக தெரிவித்த மேலதிக செயலாளர் இதற்காக அரசாங்கத்தை போன்று தனியார் துறை ஊடகங்களினதும், சிவில் அமைப்புக்களினதும் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும். (ச)

## பெண் பொலிஸ்க்கு கத்திக் குத்து

யாழ்ப்பாணம், பெப். 04


கத்திக்குத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் புத்தூர் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்ற இடம்பெற்றது.

சம்பவத்தில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 24 வயதான ஜெயக்குமார் தர்சினி என்பவரே காயமடைந்தார்.

காயமடைந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்




## ஒரு கிலோ எடை தங்கத் தட்டு பறிமுதல்

கொழும்பு, பெப். 06

சுமார் 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகை தங்கம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக அவற்றை நாட்டுக்கு கொண்டு வந்த இந்தியப் பிரஜை ஒருவர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதை தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் டுபாயில் இருந்து வருகை தந்த இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடைய தங்க தகடு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

# தொடர்ச்சிகள்

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளன. பிரதான சுதந்திர தின நிகழ்வு கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

சுதந்திர தினத்தை ஒட்டி தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, தேசிய உணர்வூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. எனினும் தமிழர்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் - குறிப்பாக வடக்கு மாகாணத்தில் அவ்வாறான கொண்டாட்டங்கள் எவையும் பெருமளவில் இல்லை. எனினும் இராணுவத்தினர் தேசியக் கொடிகளை முகாம்களிலும் முக்கிய சந்திகளிலும் பறக்கவிட்டு அலங்கரித்துள்ளனர்.(ச)

### தீ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீயால் கிழக்கு நுழைவாயிலில் இருந்து ஆயிரங்கால் மண்டபம் வரை இருந்த 50 இற்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து சாம்பலாயின. மேற்கூரைகளில் வரையப்பட்டிருந்த புராதன படங்களும் தீயால் நாசமாகின.

ஆலய பிரகாரங்களில் இருந்த புராதன சிலைகளில் இரசாயனக் கலவை பூசப்பட்டு இருந்ததால் கல்தூண்கள் சிலைகளிலும் தீ பற்றியது. மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தத் தீ விபத்தால் பெரும் அழிவுகள் ஏற்படலாம் என மக்கள் அச்சத்தில் உள்ளனர். (இ)

### வடகிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐதேகவின் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

“ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலமே, மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில், 276 சபைகளை ஐதேக கைப்பற்றும் என்று தெரிய வந்துள்ளது. வடக்கில் மொத்தம் 34 உள்ளூராட்சி சபைகளும், கிழக்கில் மொத்தம் 45 உள்ளூராட்சி சபைகளும் உள்ளன.

இவற்றில், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் அதிகளவில் உள்ள சபைகள் தவிர்ந்த, தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் உள்ள 51 உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும்” என்றும் அவர் தெரிவித்தார். (இ)

### மாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்போது தனது மகனை அப்பதவிக்குக் கொண்டு வர நினைப்பது பெருந்துரோகம் என நேற்று வவுனியா கலைமகள் விளையாட்டரங்கில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தில் தியாகராசா மேலும் பேசினார். (ச)

### முன்னணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்க மாட்டோம் எனக் கூறி அங்கிருந்த ஒலி மற்றும் ஒளி சாதனங்களின் வயர்களை அறுத்துவிட்டு மேடையில் அமர்ந்திருந்தனர்.

மக்கள் அப்பகுதியில் திரளத் தொடங்கவே அங்கிருந்து அவர்கள் விலகிச் சென்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் மக்களுடன் உரையாற்றியபோது ஓட்டோக்களில் வந்த ஈ.பி.டி.பி. குண்டார்கள் ‘இது ஈ.பி.டி.பியின் இடம் கலைந்து செல்லுங்கள் எனக் கூறி கற்களை வீசித் தாக்கி விட்டு சென்றனர்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

### சுதந்திரதினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வீர்களா? எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அளித் பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரின் பதிலின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு:

1948ல் ஆங்கிலேயரிடம் இருந்து எமக்கு சுதந்திரம் பெறப்பட்டதாக தமிழ் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பொருட்டு வெளிநாட்டு உள்ளீடல்கள் இல்லாத ஒரு மகிழ்ச்சிகரமான, திருப்தி தரும், செழிப்பார்ந்த நாடொன்று கட்டி எழுப்பப்படப் போகின்றது என்று தமிழராகிய நாம் எதிர் பார்த்தோம்.

ஆனால் சிங்கள அரசியல் தலைவர்கள் வேறு கரவான எண்ணங்கள் உடையவர்களாக அப்போதிருந்தார்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. பெரும்பான்மையினர் என்ற விதத்தில் சர்வ அரச அதிகாரங்களையும் ஆங்கிலேயரிடம் இருந்து அவர்கள் பெற்றிருந்தார்கள். அவற்றை வைத்துக் கொண்டு ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் சிங்கள இனத்தவர்களுக்கு எதிராகப் பாரபட்சமாக அவர்கள் நடந்து கொண்டார்கள் என்ற பொய்யான காரணத்தைக் காட்டி சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார்கள்.

தமிழ் மக்களை எல்லா விதங்களிலும் வலுவிழக்கச் செய்ய அவர்களுக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. “சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்ட போது தான் தமிழர்கள் அளவான சூடு கொண்ட வறுவல் பாத்திரத்தில் இருந்து அனலெறியும் அடுப்பில் விழுந்துள்ளமையை உணர்ந்தார்கள்.

பல விதமான பாரபட்சம் மிகுந்த சட்டங்கள் (தமிழர்களுக்கு எதிராக) கொண்டு வரப்பட்டதுமல்லாமல் வடக்கு கிழக்கு தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களில் தமிழர்கள் வாழ்ந்து வந்த அவர்களின் வாசஸ்தலங்களில் இருந்து அவர்களை அடித்து விரட்ட கலவரங்களும் கலகங்களும் அப்போதைய அரசாங்கங்களினாலேயே முடுக்கி விடப்பட்டன.

இவற்றிலிருந்து ஒரு உண்மை புலப்பட்டது. தமிழர்கள் தமது சுதந்திரத்தை சிங்கள மக்களிடம் பறிகொடுத்தமை வெளிப்பட்டது. இன்றும் நிலைமை மாறவில்லை. நாட்டின் வடகிழக்கு மாகாணங்கள் முற்றுகையிடப்பட்ட பிரதேசங்கள் போல் பெருந் திரளான இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வடகிழக்கு மாகாணங்களின் அரசியல், சமூக, பொருளாதார செயற்பாடுகள் அனைத்தும் மத்தியின் கட்டுப்பட்டிலேயே இருந்து வருகின்றன. வடகிழக்கில் இருக்கும் தமிழ் மக்களின் செறிவைக் குறைத்து அங்கு பெரும்பான்மையினரின் உள்ளீடல்களையும் உறைவிடங்களையும் அதிகமாக்குவதே அரசின் நோக்கம் என்பது வெள்ளிடைமலையாகியுள்ளது.

ஆகவே வெள்ளையரிடம் இருந்து நாம் பெற்ற சுதந்திரம் இன்று பொருளற்றதாகப் போய்விட்டது. ஏனெனில் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாங்கள் இன்று பெரும்பான்மை இனத்தவரின் ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டுவிட்டோம். ஒரு முறையான சமஷ்டி அரசியல் யாப்பின் கீழ் உண்மையான அதிகாப் பகிர்வு பெற்றாலேயே அன்றி நாம் எமது பறி கொடுக்கப்பட்ட உரித்துக்களை மீண்டும் பெற முடியாது. ஆகவே பெப்ரவரி நான்காந் திகதியை எவ்வாறு தமிழர்களாகிய நாங்கள் கொண்டாட முடியும்? (ச)



## அமலாபாலுக்கு பாராட்டு

சென்னை, பெப்.04

தனக்கு பாலியல் தொந்தரவு அளித்த வருக்கு எதிராக பொலிஸில் புகார் செய்த நடிகை அமலா பாலுக்கு நடிகர் விஷால் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நடிகர் விஷால் தனது டுவிட்டர் பக்கத்தில், "அமலா பாலின் தைரியத்துக்கு தலை வணங்குகிறேன். பாலியல் அத்துமீறலுக்கு எதிராக வழக்கு தொடர நிறையவே தைரியம் வேண்டும். இந்த வழக்கில் துரித நடவடிக்கை எடுத்த பொலிஸுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் கூறியுள்ளார்.

அண்மையில், தொழிலதிபர் ஒருவர் தனக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக நடிகை அமலாபால், பொலிஸில் புகார் அளித்தார். கொட்டிவாக்கத்தைச் சேர்ந்த தொழிலதிபர், அழகேசன் என்பவர் தனக்கு பாலியல் ரீதியான அணுகுமுறையில் பேசியதாக நடிகை அமலா பால் மாம்பலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அமலாபாலின் புகாரின் பேரில் கொட்டிவாக்கத்தைச் சேர்ந்த தொழிலதிபர் அழகேசன் என்பவரை பொலிஸ்ர் கைது செய்துள்ளனர். (இ)

பொலிவூட் நடிகை அதிதிராவ்

## மீண்டும் மணிரத்னம் இயக்கத்தில்



சென்னை, பெப்.04,

பத்மாவத் திரைப்படத்தில் குறைந்த அளவே தோன்றினாலும் ரசிகர்கள் பாராட்டு அளித்துவருவதற்கு நன்றி தெரிவித்த பொலிவூட் நடிகை அதிதி ராவ், தான் மீண்டும் இயக்குநர் மணிரத்னம் படத்தில் நடிக்க உள்ளதை உறுதிப்படுத்தினார்.

அதிதி கடைசியாக இயக்குநர் மணிரத்னத்துடன் இணைந்து பணியாற்றிய படம் கடந்த ஆண்டு வெளியான 'காற்று வெளியிடை' என்பது குறிப்பிடத்தக்கது.

## 12 வயது சிறுமிக்கு நிலவோடு திருமணம்

சென்னை, பெப்.04

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே, 12 வயதுச் சிறுமியை நிலாவுக்கு மணமகளாக்கிய சடங்கு தொடர்பில் குழந்தைகள் நல ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பியுசிஎல் அமைப்பைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரும் வழக்கறிஞருமான டி.நாகஷீலா கூறும்போது, "குழந்தைகளை தனிமைப்படுத்தி அவர்களை மணமகளாக முன்னிறுத்தும் எத்தகைய சடங்காக இருந்தாலும் அது குழந்தைகள் உரிமைகளுக்கு விரோதமானது" எனக் கூறியுள்ளார்.

பூப்படையாத பதின்ம பருவ சிறுமியைத் தேர்ந்தெடுத்து அவரை மூன்று ஆண்டுகளுக்கு நிலாப்பெண்ணாக நியமிக்கின்றனர்.

திண்டுக்கல் வேடசந்தூரில் உள்ள தெய்வநாயக்கன்பட்டியைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரால் இந்தச் சம்பிரதாயம் பின்பற்றப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 7 நாட்களுக்கு இந்த சடங்கு நடைபெறுகிறது. தை முழுநிலவு நாளன்று இந்த சடங்கு நிறைவு பெறுகிறது. இந்த ஆண்டு சந்திர கிரகணம் இருந்ததால் ஒரு நாள் முன்னதாகவே இச்சடங்கு முடிக்கப்பட்டுள்ளது.

நிலாப்பெண்ணாக தேர்ந்தெடுக்கப்படும் சிறுமிக்கு ஆவாரம் பூ மாலை அணிவித்து கிராமம் முழுவதும் ஊர்வலமாக அழைத்துச் செல்கின்றனர். பின்னர், கோயிலில் பூஜை நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலாப் பெண் ஒரு குடிசைக்குள் அனுப்பப்படுகிறார். அன்றைய இரவு ஓலை குடிசைக்குள் தங்கும் சிறுமி மறுநாள் காலையில் விளக்கேற்றி அதை ஆற்றில் மிதக்க விடுகிறார். இத்துடன் இந்த சடங்கு நிறைவு பெறுகிறது.

இச்சடங்கு குறித்து ஊர்க்காரர் ஒருவர் கூறும்போது, "இச் சடங்கை நிலாவை சாந்தப்படுத்தி ஊரில் உள்ள பெண் குழந்தைகளுக்கு நல்ல தேக ஆரோக்கியம் வழங்குவதற்காக நடத்துகிறோம். 5 தலைமுறைகளாக இந்த சடங்கு நடத்தப்படுகிறது" என்றார்.

# படகு கவிழ்ந்தது: 90 பேர் உயிரிழப்பு



லிபியாவில் சோகம்

லிபியா, பெப்.04

லிபியாவின் கடற்கரைப் பகுதி யில் நேற்றுக் காலை ஐரோப்பாவுக்கு அகதிகளாக சென்றவர்களின் படகு கவிழ்ந்தது. இதில் 90 பேர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக ஐ.நா.சபை அகதிகளுக்கான அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஒலிவியா ஹீட்டன் தெரிவித்தார்.

லிபியாவின் ஜுவாரா கடல் பகுதியில் 10 சடலங்கள் ஒதுங்கின. இவற்றில் 8 பேர் பாகிஸ்தானையும் 2 பேர் லிபியாவையும் சேர்ந்தவர்கள். அதிக எண்ணிக்கையானோர் இருந்ததாலேயே படகு கவிழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐரோப்பா, இத்தாலிக்கு கடல் மார்க்கமாக லிபியா வழியே சட்ட விரோதமாகச் செல்பவர்களில் சமீபகாலமாக பாகிஸ்தானியர்களின் எண்ணிக்கையே அதிகம் என்று ஹீட்டன் தெரிவித்தார். (அ)

# தடையை மீறுகிறது வடகொரியா



ஐ.நா. குற்றச்சாட்டு

நியூயோர்க், பெப்.04

"வடகொரியா அதன் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை மீறியுள்ளது. கடந்த வருடம் போலியான பாதைகள் மற்றும் தந்திரங்களை உபயோகித்து சுமார் 200 மில்லியன் டொலரை ஏற்றுமதியில் வருவாயாக அந்தநாடு ஈட்டியுள்ளது. மேலும் சிரியாவுக்கு இராணுவ இரசாயன தாக்குதல் திட்டங்களை உருவாக்கவும் வடகொரியா ஒத்துழைப்பு அளித்துள்ளதற்கான சான்றும் உள்ளது" என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல், உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வந்தன.

இந்நிலையில் கடந்த 3 ஆம் திகதி, 6 ஆவது முறையாக அணுகுண்டைவிட அதிக சக்திவாய்ந்த ஒரு ஹைட்ரஜன் குண்டை வடகொரியா வெற்றிகரமாகச் சோதனை செய்தது.

இதையடுத்து, வட கொரியா மீது 8 ஆவது முறையாக பொருளாதாரத் தடை விதித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சாதித்தது இளம் இந்தியா

ஓவல், பெப்.04

நியூஸிலாந்தில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி அவுஸ்ரேலியாவை 8விக்கெட் வித்தியாசத்தில் வென்று உலகக் கிண்ணத்தை நான்காவது முறையாகக் கைப்பற்றியது.

நியூஸிலாந்தின் ஓவல் மைதானத்தில் நேற்று நடந்த இந்த இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணி துடுப்பாட முடிவு செய்தது.

அவுஸ்ரேலியாவுக்கு தொடக்க வீரர்கள் கைக்கொடுக்காத நிலையில் நான்காவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த உப்பல் மற்றும் மெர்லோ 75 ஓட்டங்களை இணைப் பாட்டமாகச் சேர்ந்தனர்.

அதன் பின்னர் களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் அவுஸ்ரேலிய அணி 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 216 ஓட்டங்களை எடுத்தது.
அதிகபட்சமாக அந்த அணியைச் சேர்ந்த மெர்லோ 76 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் 217 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு கப்டன் பிரித்வி ஷாவும், மஞ்சோட் கல்ராவும் சிறப்பான தொடக்கத்தை அளித்தனர்.

பிரித்வி 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய சுப்மன் கில் 31 ஓட்டங்களில் வெளியேறினார். ஆயினும் தொடக்க வீரரான மஞ்சோட் கல்ராவும், ஹர்விக் தேசாயும் ஜோடி சேர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்திய வீரர் மஞ்சோட் கல்ரா கடைசி வரை ஆட்டமிழக்காமல் அடித்த சதமும், தேசாய் அடித்த 47 ஓட்டங்களும் இந்திய அணி 38.5 ஓவர்களில் 2 விக்கெட் இழந்திருந்த நிலையில் 220 ஓட்டங்களை அடித்து உலகக்கிண்ணத்தை வெல்ல வித்திட்டது.

19 வயதுக்குட்பட்டோருக்கான இந்திய கிரிக்கெட் அணி ஏற்கனவே கடந்த 2000, 2008 மற்றும் 2012 ஆண்டுகளில் நடந்த உலகக்கிண்ணங்களையும் வென்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் ட்ராவிட்டுக்கு 50 லட்சம் ரூபாவும், அணியில் இடம்பெற்ற அனைத்து வீரர்களுக்கும் தலா 30 லட்ச ரூபாவும், அணியை சேர்ந்த மற்ற ஊழியர்களுக்கு தலா 20 லட்ச ரூபாவும் ஊக்கப் பரிசாக வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடுச் சபை அறிவித்துள்ளது. (அ)





# இலங்கை இமாலய இலக்கு தடுமாறும் பங்களாதேஷ்

சிட்டகொங், பெப்.04

பங்களாதேஷ்க்கு எதிரான டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்புக்கு 713 ஓட்டங்கள் குவித்த நிலையில், பங்களாதேஷ் தடுமாற்றத்துடன் ஆடுவதால், வெற்றி இலங்கையின் பக்கம் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்த நிலையில் சிட்டகொங்கில் கடந்த 31ஆம் திகதி தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியில், பங்களாதேஷ் அணி 513 ஓட்டங்களைக் குவித்தது.

அதற்குப் பதிலளித்தாடிய இலங்கை அணி,சிறப்பாக ஆடியது. நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இலங்கை அணி வீரர் ரோஷன் சில்வா தன் கன்னிச் சதமடித்து 109 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.
அணித்தலைவர் சண்டிமாலின் 87 ஓட்டங்களும், டிக்வெலவின் அதிரடியான 61 ஓட்டங்களும் கைகொடுக்க 713 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த நிலையில் , இலங்கை அணி தன் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதனால், இலங்கை 200 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. பங்களாதேஷ் அணி தரப்பில், இஸ்லாம் 4 விக்கெட்டுகளும், ஹசன் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இதன் பின்னர், தனது இரண்டாவது இன்னிங்ஸை பங்களாதேஷ் ஆடத் தொடங்கியது.

கேயஸ் 19 ஓட்டங்களிலும், தமிம் இக்பால் 41 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் வந்த ரஹீம் 2 ஓட்டங்களில் ஹேரத் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

4ஆம் நாள் ஆட்டநேர முடிவில், பங்களாதேஷ் 3 விக்கெட் இழப்புக்கு 81 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மொமினுல் ஹக் 18 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். இன்று கடைசி நாள் ஆட்டம் நடைபெற உள்ளது. (அ)




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 04.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.